ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2310/30 - 2022 දෙසැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.15
2310/30 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ 4/2003

**2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டம்**

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு 8, 10, 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (3) ஆம் பந்தியுடன் சேர்த்துவாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 27 ஆம் பிரிவின்கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**ரணில் விக்ரமசிங்க,**
சனாதிபதி.

கொழும்பு,
2022, திசெம்பர் 15.

**ஒழுங்குவிதிகள்**

2022, ஒற்றோபர் 20 ஆந் திகதிய 2302/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நலன்புரி அனுகூலக் கொடுப்பனவு (கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையவர்களாகவுள்ள ஆட்களைத் தெரிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) அதன் ஒழுங்குவிதி 2 இன் (1) ஒழுங்குவிதியில் “இதற்கான அட்டவணை I” எனும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான நலன்புரி அனுகூலக் கொடுப்பனவு திட்டத்தின் நோக்கத்துக்காக இதற்கான அட்டவணை I” எனும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

1A - PG 6105 — 706 (2022/12)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*(2)* *அதன் அட்டவணை* I *இன் பாகம்* III *இனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பாகத்தினை உட்புகுத்துவதன் மூலமும்:-*

**"பாகம் IV**

**தெரிவு வெட்டுப்புள்ளியினை கணக்கீடு செய்தல்**

*தெரிவு வெட்டுப்புள்ளி தேசிய பற்றாக்குறைமுறையுடன் ஒத்திசையும் முறையில் கிடைக்கத்தக்கனவான நிகழ்ச்சித்திட்ட வரவுசெலவுத் திட்டத்திற்கு விநியோகிப்பதற்காக மாவட்ட மட்டத்தில் தீர்மானிக்கப்படும்.*

*வழங்கப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீடு* Q *ஆகவும் 1 ஆவது மாவட்ட ஒதுக்கீடு* (qi) *பின்வருமாறும் அமையும்;*

$$(x) = \frac{\text{நாட்டிலுள்ள நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு தேவைப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை}}{\text{நாட்டிலுள்ள குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை}}$$

$(q_i)$ = *தேசிய மட்டத்தின் மெய் தலா செலவீனத்தின்* $X^{th}$ *சதவீதத்தின் கீழ் மாவட்டத்திலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை.*

*ஆயின்;*

*பின்னர்;*

$$Q = \sum_{i=1}^{25} qi$$

*இங்கு,* $i$ = *1, 2, 3,* ................................. *25. (*$i$*= மாவட்டம்)*

EOG *12- 0166*